2013 மே 10]

464—

சிப்காட் தொழில் வளாகம்

***17847—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதியில் புதிய சிப்காட் தொழில் வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கேட்டாலும் கிடைக்காது கடந்தகால ஆட்சியில். ஆனால், கேட்காமலேயே கொடுப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதற்கிணங்க (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 7–5–2013 அன்று விதி 110–ன்கீழ் அறிவித்த வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பில், தென் மாவட்டங்களில் ஒன்றான விருதுநகர் பகுதியில் 3,400 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் வளாகம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அந்த அறிவிப்பிற்கிணங்க அந்தப் பகுதியிலே சிப்காட் வளாகம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் தாய்த் தமிழ்நாட்டின் தலைவிதியை பொன் எழுத்துக்களால் வடித்து எழுதும் வகையில், சட்டப் பேரவை விதி 110–ன்கீழ் ஒவ்வொரு நாளும் நம் தெய்வீகத் திருமகள் அம்மா அவர்கள் வாரி, வாரி வழங்கி வருகின்ற முத்து, முத்தான மக்கள் நலன் காக்கும் அறிவிப்புகளில் அயல்நாடுகளுக்கு இணையாக இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும்வகையிலும், இத்திருநாட்டில் இதுவரை பிறந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், இனி பிறக்கப்போகின்றவர்களுக்கும் சேர்த்தே வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையிலும், வல்லரசு நாடுகளுக்கு இணையாக நம் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்திடும்வகையிலும், இதுவரை வரலாறு கண்டிராத*

தொழிற்புரட்சிக்கு வித்திடும்வகையிலும், 9 தென் மாவட்டங்களில் 20,250 ஏக்கர்களில் அமைக்கப்படுகின்ற தொழிற்பூங்காக்களைப் போல, விருதுநகர் மாவட்டத்திலும் (மேசையைத் தட்டும் ஒலி), பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், உணவுப் பதப்படுத்துதல், பொறியியல் மற்றும் அச்சுத் தொழிற்கூடங்கள் ஆகியவை இடம்பெறும்வகையில் ஒரு தொழிற்பூங்காவை 3,400 ஏக்கரில் உருவாக்கித் தருவதோடு மட்டுமல்லாமல், தொழில் தொடங்குவோருக்கு மானிய விலையில் நிலமும், மூலதன மானிய உயர்வும், மதிப்புக் கூட்டு வரியிலே சலுகையும் தந்து, ஒட்டுமொத்த இளைய சமுதாயத்தின் வாழ்விலே நம்பிக்கை ஒளி ஏற்றிவைத்திட்ட இந்தியத் திருநாட்டின் பொருளாதார ஞானி, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, இளைய சமுதாயத்தினரின் சார்பிலே கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமைகின்றேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கும்மிடிப்பூண்டி தொகுதியின் அருகிலுள்ள, ஆந்திர மாநிலத்தின் தடா என்ற பகுதியில் Sri City என்றும் SEZ அமைந்துள்ளது. பல நல்ல தொழிற்சாலைகள், அதாவது non-polluting industries அங்கே சென்றுவிடுவதால் கும்மிடிப்பூண்டி பகுதியில் Special Economic Zone என்னும் SEZ அமைக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு சிப்காட் வளாகங்கள் இருக்கின்றன. அங்கு மாண்புமிகு உறுப்பினர் SEZ அமைக்க வேண்டும் என்று கேட்கிறார். SEZ—ஐப் பொறுத்தவரையில் மத்திய அரசு minimum alternate tax கொண்டு வந்த காரணத்தினால் புதிய தொழில் முனைவோர் வருவதில்

2013 மே 10]

சிறிது காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கின்றது. அதைத்தான் அன்றையதினம் காங்கிரஸ் உறுப்பினர் கேட்டபோதுகூட நான் சொன்னேன். அந்தவகையிலே ஆந்திராவிற்குச் சென்றாலும் அது பொருந்தும் என்ற காரணத்தினாலே SEZ துவங்குகிறவர்கள் யாரும் ஆந்திராவிற்குச் செல்வதில்லை. அங்கு விலை குறைவாகக் கொடுக்கின்ற காரணத்தினால், ஏக்கர் ஒரு ரூபாய்க்குக் கொடுக்கின்ற காரணத்தினால் செல்கின்றார்களேயொழிய, ஏதோ தமிழகத்தில் அந்த SEZ துவங்காமல் ஆந்திராவிற்குச் செல்கிறார்கள் என்று சொல்வது தவறான கருத்து.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் SEZ-ஐப் பொறுத்தவரையில் தமிழகத்தில் 9 SEZ-கள் இயங்கி வருகின்றன. இன்னும் இடம் இருக்கிறது. இன்னும் யாரையாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணுகினால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இடம் கொடுத்து, அந்த SEZ அமைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 465, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள்.*

465—

கூட்டுறவு நூற்பாலை

***7364—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழகத்திலுள்ள 5 கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 104.41 கோடியையும், இராமநாதபுரம்